**கட்புலனற்றோர் புனர்வாழ்வு நம்பிக்கை நிதியம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கட்புலனற்றோர் புனர்வாழ்வு நம்பிக்கை நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும், ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை “ திட்டமிட்டு பேணுதல்” நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நாட்குறிப்பு பதிவுகள் தயாரித்து உறுதிப்படுத்தாமல் கணக்கு மீதிகள் சீராக்குதல் மற்றும் தீர்த்தல், பேரேட்டில் பதிதல், கணக்கு வைத்தல் குறைபாடுகளை சரிசெய்தல் போன்றவற்றின் போது கணக்கீட்டு நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது உறுதிப்படுத்தப்பட்ட நாட்குறிப்பு பதிவுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடுகின்றோம். | உறுதிப்படுத்தப் பட்ட நாட்குறிப்பின் அடிப்படையில் கணக்கீட்டு நடவடிக்கைகள் அமுல்படுத்தப் படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கொடுக்கல் வாங்கல்களை பதியும் போது தெளிவற்ற மற்றும் முறையற்றதாக பிரதான பேரேடு பேணிச் செல்லப்பட்டிருந்தது. | உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காரணமாக கடமைகளை இலகுவாக எக்செல் மென்பொருளை பயன்படுத்தி முறையான மாதிரிப் படிவத்தில் பொது பேரேடு தயாரிக்கப்பட்டிருந்த போதும், பேரேட்டு பக்கம் குறிப்பிடப்படாதிருந்தமை மற்றும் எதிர்காலத்தில் பேரேட்டு மாதிரியை பயன்படுத்தி கொடுக்கல் வாங்கல்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | பிரதான பேரேடு ஒழுங்கு முறையாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (இ) | கொடுக்கல் வாங்கல்களுக்குரிய உறுதிச்சீட்டு இலக்கம், காசோலை இலக்கம் போன்ற விபரங்களை அழித்து மாற்றங்கள் மேற்கொண்டு வெளிப்படையாக அன்றி காசேடு பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன் அதில் திருத்தங்களுக்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் உறுதிப்படுத்தியிருக்க வில்லை. | காசோலை இலக்கம் தாமத வழுக்களினால் மாற்றமடைந்தமை சரி செய்யப்பட்டிருந்ததுடன் மாற்றங்களை செய்வதற்குரிய தனிப்பட்ட கையொப்பங்கள் இடப்படாதிருந்தமை, எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாதிருக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | காசேடு சரியாகவும், வெளிப்படையாகவும் பேணிச் செல்வதற்கும் மற்றும் அதன் திருத்தங்களுக்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் கையொப்பம் இட்டு உறுதிப்படுத்துதலும் வேண்டும். |

**1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 கணக்கு விடயங்களுக்குரிய கூட்டுமொத்தமாக ரூபா 198,000 ஆன அட்டுறு செலவினத்திற்காக நியமம் 01 இன் பிரகாரம் கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவத்தினால் கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை. | அட்டுறு செலவினத்திற்காக கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப் படல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவு மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15(1) ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப் பிரமாணம் 877(2)(இ) பிரிவு | மீளாய்வாண்டின் நிதியத்தின் செயலாற்றல் அறிக்கை தயாரித்து நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. நிதியத்தின் செயலாற்றல் சமூக சேவைகள் திணைக்களத்தின் செயலாற்றல் அறிக்கையில் காண்பிக்கப்படுவதாக நிதியத்தின் செயலாளர் கணக்காய்விற்கு அறிவித்திருந்த போதும் அந்த செயலாற்றல் அறிக்கையில் நிதியத்தின் செயலாற்றல் மற்றும் இலக்குகள் என்ன என்பது மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தது. | முகாமைத்துவத்தினால் கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை. | நிதியத்தின் செயலாற்றல் அறிக்கையை தயாரிப்பதற்கும், கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1992 இன் 09 ஆம் இலக்க கட்புலனற்றோர் புனர்வாழ்வு நம்பிக்கை நிதிய சட்டத்தின் 6(2)(1)(ஈ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மிகைப் பணம் நிதியத்தினால் தீர்மானிக்கப்படுகின்ற சேமிப்பு பத்திரங்களில் முதலீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் முன்னைய 05 வருட காலத்தின் போது வழங்கப்பட்ட அரசாங்கத்தின் மானியங்களில் முதலீடு செய்யப்படாமல் நிதியத்தின் வங்கி நடைமுறைக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கி நடைமுறைக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காசு மீதி முறையே ரூபா 1,669,108 | 2022 ஆம் ஆண்டின் போது நிதியத்தின் நடைமுறைக் கணக்கில் மிகையாக உள்ள பணத்தில் ரூபா 2,000,000 தொகை அந்த கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டு தேசிய சேமிப்பு வங்கியில் நிலையான வைப்புக் கணக்கில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் மிகை பணம் ஏற்படுமாயின் அதனை எதிர்காலத்தில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மிகைப் பணத்தை ஆக்கபூர்வமாக முதலீடு செய்து நிதியத்தின் நிதி நிலைமையை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

தொகை, ரூபா 2,451,803 தொகை, ரூபா 2,229,765 தொகை, ரூபா 3,395,003 மற்றும் ரூபா 3,032,020 ஆக இருந்தது. இந்த மிகைக் காசு மீதியை சேமிப்பு பத்திரங்களிலோ அல்லது ஏனைய முதலீட்டு வழிகளிலோ முதலீடு செய்து நிதியத்தின் நிதி நிலைமைமை விருத்திசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 275,050 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 372,844 ஆக இருந்தது. அதன்படி நிதி விளைவுகளில் ரூபா 97,794 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 2,101,697 அதிகரித்திருந்த போதும் அதற்கு ஒப்பீடாக கல்வி, கலாசார மற்றும் புனர்வாழ்வு நிதி உதவி போன்ற செலவினங்கள் முறையே ரூபா 2,041,085 இனாலும், ரூபா 630,288 இனாலும் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கட்புலனற்ற மக்களின் புனர்வாழ்வு மற்றும் நலன்புரிகளை நோக்காகக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை தேசிய மட்டத்தில் வெளிப்படையாகவும் முறையாகவும் அமுல்படுத்துவதற்காக கட்புலனற்ற மக்களின் எண்ணிக்கை மற்றும் மாவட்ட ரீதியிலான பரவல், வயது கட்டமைப்பு மற்றும் கட்புலனற்ற தன்மை, பொருளாதார நிலையை இனங்காணல், உரியவாறு சரிசெய்தல்கள், மற்றும் ஆக்கபூர்வமாக தீர்மானம் எடுப்பதற்காக கட்புலனற்ற மக்களின் தகவல்களை உள்ளடக்கிய தரவு முறைமையொன்று தயாரிப்பதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒட்டுமொத்த நாட்டையும் மேவுகை செய்யும் வகையில் தரவு முறைமையொன்றை தயாரித்தல் மிகவும் சிக்கலான பணியாகும். அதற்காக தேவையான நிதி, பௌதீக மற்றும் மனித வளங்கள் நிதியத்திடம் காணப்படவில்லை. இதன் காரணமாக நிதியத்தால் தற்போது தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட தரவுகளின் அடிப்படையே பயன்படுத்தப்படுகின்றது. | கட்புலனற்ற மக்களின் தகவல்களை உள்ளடக்கிய தரவு முறைமை யொன்றை தயாரிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) முதலாம் ஆண்டு முதல் கல்வி க.பொ.த (சா. தரம்) வரை கல்வி பயில்கின்ற பிள்ளைகள், உயர்தரத்தில் பயில்கின்ற பிள்ளைகள், பல்கலைக்கழக மாணவர்கள், மற்றும் லுவி பிறேலி என்ற பெயரில் கட்புலனற்ற பெற்றோர்களின் விழிப்புலன் உள்ள பிள்ளைகளுக்கு நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கல்வி நிதியுதவியாக மாணவர் உதவிப் பணம் வழங்குதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) ஒட்டுமொத்த நாட்டையும் மேவுகை செய்யும் வகையில் கட்புலனற்ற பிள்ளைகளின் எண்ணிக்கையை இனங்காண்பதற்கு உரிய தரவு முறைமையொன்று பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை. | வரையறுக்கப்பட்ட வளங்களில் நாடு முழுவதையும் மேவுகை செய்யும் வகையில் தரவு முறைமையொன்றை பேணிச் செல்லும் இயலுமை வரையறுக்கப்பட்டிருந்ததுடன் எவ்வாறாயினும் நாட்டையும் மேவுகை செய்யும் வகையில் நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. | தரவு முறைமை யொன்றை தயாரிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) மீளாய்வாண்டில் பதிவு செய்திருந்த மாணவ மாணவியரில் 21 பேர்களுக்காக ஆண்டிற்குரிய செலுத்த வேண்டிய மாணவர் உதவித் தொகை ரூபா 269,000 தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுகளுக்காக 07 மாணவர்களுக்காக ரூபா 42,000 தொகையான மாணவர் உதவிப்பணம் மற்றும் நான்காம் காலாண்டிற்காக மாத்திரம் 24 மாணவர்களுக்காக ரூபா 90,000 மாணவர் உதவிப்பணம் என்பன செலுத்தப்பட்டிருக்கவில்லை. | மாணவர் உதவிப் பணத்தை வழங்குவதற்கு அவர்களுக்கு அனுப்பப்பட்ட பொது 35 உறுதிச்சீட்டு கையொப்பமிட்டு அதிகமான தரப்பினர் மீண்டும் சமர்ப்பித்த போதும் சிறு தரப்பினர் குறித்துரைத்த காலத்தில் அனுப்பியிருக்கவில்லை. உறுதிச்சீட்டுக்களை விரைவாக வழங்குமாறு தொடர்ந்தும் அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது வரையில் இந்த நிலைமை குறைக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான குறித்துரைத்த காலத்தில் மாணவர் உதவிப் பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | பல்கலைக்கழகத்தில் கல்வியினை பயில்கின்ற கட்புலனற்ற பிள்ளைகளுக்கு மாணவர் நிதி உதவி வழங்கும் நடவடிக்கைகள் இலங்கையில் தாபிக்கப்பட்ட 17 அரச பல்கலைக் கழகங்களுக்கிடையே 06 பல்கலைக்கழகங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தது. மேலும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் மாணவியருக்காக மாணவர் நிதி உதவியை வழங்குதல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 10 பல்கலைக்கழகங்களில் மாணவர் நிதி உதவி நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்படுவதுடன் கட்புலனற்ற மாணவர் இன்றிய பல்கலைக்கழகத்திற்காக நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்படுவதில்லை. 1 ஆம் ஆண்டு முதல் க.பொ.த (சா. தரம்) வரையான மாணவர் நிதி உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பெறுனர்களும் மேவுகை செய்யப்படுகின்றனர். எவ்வாறாயினும், அதற்காக விசேட நிதி உதவி திட்டமொன்றை அமுல்படுத்துவதற்கு கவனம் செலுத்தப்படும். | காலரீதியான தேவையின் அடிப்படையில் மாணவர் நிதி உதவி நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1992 இன் 09 ஆம் இலக்க கட்புலனற்றோர் புனர்வாழ்வு நம்பிக்கை நிதிய சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்திற்காக அரசாங்கத்தின் நிதியேற்பாடுகளுக்கு மேலதிகமாக உள்நாடு அல்லது வெளிநாடுகளிலிருந்து பெறப்படுகின்ற மானியம், நன்கொடை அல்லது பரிசு, தேறிய அல்லது சேகரிக்கப்படுகின்ற பணம் மற்றும் நிதியத்தின் முதலீடுகளிலிருந்து பெறப்படுகின்ற வருமானம் அல்லது நிதியத்திற்கு அறவிட வேண்டிய அல்லது ஏனைய நிதியத்தின் மூலம் நிதி பெற்றுக் கொள்வதற்கு சட்டரீதியான ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்த போதும் நிதியத்தின் ஆரம்பம் முதல் மீளாய்வாண்டு வரை 28 வருட காலப்பகுதியில் நிதியத்தை அபிவிருத்தி செய்து கொள்வதற்காக அரசாங்கத்தின் மானியங்களுக்கு மேலதிகமாக ஏனைய நிதி மூலங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதியத்திற்கான பிரதான நிதி மூலமாக அரசாங்கத்திலிருந்து கிடைக்கின்ற மானியமே இருந்தது. வருமானத்தை உழைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவனத்தை நடாத்திச் சென்று கட்புலனற்ற பெண்களுக்கான நலன்புரி நிலையம் நட்டம் பெற்றமை மற்றும் நிர்வாக காரணங்களினால் மூடப்பட்டிருந்தது. எந்தவொரு நபருக்கும் நிதியத்திற்கு நன்கொடையாக வழங்கும் இயலுமை உள்ளது. அதன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 100,000 நன்கொடை கிடைத்திருந்தது. முதலீட்டு வருமானங்களை பெற்றுக் கொள்ளும் நோக்கில் மிகையாகவுள்ள ரூபா 2,000,000 பணம் நிலையான வைப்பில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. ஏனைய மூலங்களிலிருந்து நிதி வழங்கல் தொடர்பாக முகாமைத்துவ சபையின் | நிதியத்தை விருத்தி செய்து கொள்வதற்காக சட்டத்தின் 07 ஆம் பிரிவில் காண்பிக்கப் படுகின்ற பிரகாரம் ஏனைய வருமான மூலங்களிலிருந்து நிதிய வழங்கல்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அங்கீகாரத்தைப் பெற்று எதிர்காலத்தில் திட்டமொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தில் அமுல்படுத்தப்படுகின்ற நபர் நிதிய நம்பிக்கைப்பொறுப்பு மற்றும் ஆதன நம்பிக்கைப் பொறுப்பின் நலன் செலுத்துதல்களிலும் நிதியத்தை சேகரிப்பதற்கு கவனம் செலுத்தப்படும்.

(இ) நிதியத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான மீளாய்வாண்டின் செயலாற்றல் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செயற்பாடுகள் / நிகழ்ச்சித் திட்டம் | பாதீட்டு நிதியேற்பாடு | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இலக்கிடப்பட்ட நலனாளிகளின் எண்ணிக்கை | உள்ளபடியான பயன்பாடு | வசதிகள் வழங்கப்பட்ட நலனாளிகளின் எண்ணிக்கை | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயலாற்றல் சதவீதம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | நிதி | பௌதீக |
| | ரூபா | | ரூபா | | | |
| விளையாட்டு நிதி உதவி | 100,000 | 15 | 12,000 | 02 | 12 | 13 |
| தொழில் பயிற்சி | 450,000 | 05 | 122,000 | 03 | 27 | 60 |
| கல்வி மற்றும் கலாசார உதவி | 6,650,000 | 425 | 6,199,555 | 360 | 93 | 85 |
| புனர்வாழ்வு உதவி | 950,000 | 15 | 952,187 | 11 | 100 | 73 |
| கண் வில்லை மற்றும் மருத்துவ உதவி | 250,000 | 08 | 46,950 | 03 | 19 | 38 |
| வெள்ளைப் பிரம்பு தின விழா | 1,300,000 | 300 | 0 | 0 | 0 | 0 |
| மொத்தம் | 9,700,000 | | 7,332,692 | | | |

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கட்புலனற்றவர்களின் நலன்களை நோக்காகக் கொண்ட திட்டமொன்றை அமுல்படுத்துவதன் கீழ் நிதியத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளுக்கு புறம்பாக சுயதொழில் வாய்ப்பு உதவிகளை வழங்குதல், மின்சாரத்தை வழங்குவதற்காக உதவிகளை வழங்குதல், இசைக்கருவிகளை வழங்குதல் போன்ற செயற்பாடுகளுக்காக ரூபா 235,650 செலவில் புனர்வாழ்வு உதவி மற்றும் கலாசார உதவிகளை வழங்குதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | கட்புலனற்றோர்களின் நலன்களை நோக்காகக் கொண்டு கல்வி மற்றும் கலாசார உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் கடந்த காலத்தில் ஊனமுற்ற நபர்கள் உளரீதியில் புனர்வாழ்வழிப்பதற்காக விளையாட்டு கணனிகள் மற்றும் மொழி தொடர்பிலான பயிற்சிகளை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தது. கொவிட் தொற்றுநோய் காரணமாக சுயதொழில் உதவி, வீடுகளுக்கு மின்சாரம், நீரை பெற்றுக் கொள்வதற்காக உதவிகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | நிதியத்தின் நோக்கம் மற்றும் பணிப் பொறுப்புக்களை மேவுகை செய்யும் வகையில் கட்புலனற்ற மக்களுக்கான நலன்களை வழங்குவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல் வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதியம் தாபிக்கப்பட்டு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் ஆன 28 வருட காலத்தில் கடமைகளை நிறைவேற்றுவதற்கு போதியளவான பதவியணியினர் அங்கீகரிக்கப்படாதிருந்ததுடன் முறையான அங்கீகாரமின்றி செயலாளர் பதவியின் கடமைகள் சமூக சேவை உத்தியோகத்தரினாலும், ஏனைய கடமைகள் இன்னும் மூன்று உத்தியோகத்தர்களினாலும் நிறைவேற்றப்பட்டிருந்தது. மேலும் முறையான அங்கீகாரமின்றி பொருளாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். | கடமைகளை நிறைவேற்றுவதற்காக முகாமைத்துவ சபையின் தீர்மானத்தின் பிரகாரம் செயலாளர், பொருளாளர் பதவிகளுக்கும், கணக்கீட்டு நடவடிக்கைகளுக்காக முகாமைத்துவ உதவியாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு உத்தியோகத்தர் ஒருவரும் நியமிக்கப்பட்டிருந்தார். | முறையான அங்கீகாரத்தை பெற்று பதவிகளின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |